கலைஞர் 100
1924 - 2023

**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

சர்வதேச
சிறுதானிய ஆண்டு
2023

முனைவர் மா. ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 26.11.2024

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில்
இந்திய அரசியலமைப்பு நாள்**

இந்திய அரசியலமைப்பு நாள் விழா கோயம்புத்தூர் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் தோட்டக்கலைக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் 26.11.2024 அன்று நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கு தோட்டக்கலைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சிநிலையத்தின் முதன்மையர் முனைவர் பெ. ஐரின் வேதமணி அவர்கள் அரசியலமைப்பு நாள் விழாவினை ஏற்பாடு செய்து தலைமை தாங்கினார். அவர் தமது தலைமையுரையில் இந்திய அரசியலமைப்புச்சட்டம் அனைத்து தரப்பு மக்களின் உரிமைகளை பாதுகாக்கும் அரணாக உள்ளதெனவும் அனைவருக்கும் பொதுவான ஒன்றாக உள்ளதெனவும் குறிப்பிட்டார். சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு பேசிய வழக்கறிஞர் திரு. நாகராஜன் இந்திய அரசமைப்புச் சட்டம் குடிமக்களுக்கு அளித்துள்ள அடிப்படை உரிமைகள் குறித்தும் நமது அன்றாட வாழ்வில் அரசமைப்புச் சட்டத்தின் பயன்பாடு குறித்தும் விரிவாக எடுத்துரைத்தார். மேலும் பேசுகையில் இந்திய அரசியல் அமைப்பு சட்டத்தின் பல்வேறு சரத்துகள் குறித்தும் அவற்றின் அடிப்படைக் குறித்தும் விழக்கம் அளித்தார் இவ்விழாவையொட்டி நடைபெற்ற பேச்சுப் போட்டி மற்றும் கட்டுரைப் போட்டிகளில் பங்கேற்ற மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன பேராசிரியர் தே. செய்சர்லூர்துசாமி வரவேற்றார் இணைப் பேராசிரியர் மு. பிரபு நன்றி கூறினார்.

**மக்கள் தொடர்பு அலுவலர்**